செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 167 நாள் : 21/3/17

# பத்திரிகை செய்தி

## குடும்ப அட்டையில் ஆதார் எண் பதிவு செய்ய கடைசி வாய்ப்பு

வரும் 01/04/2017-ம் தேதி முதல் தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக "ஸ்மார்ட் குடும்ப அட்டை" வழங்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டையுடன் ஆதார் எண் இணைக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் மட்டுமே புதிதாக வழங்கப்படவுள்ள ஸ்மார்ட் குடும்ப அட்டையில் இடம்பெறும். எனவே, தத்தமது குடும்ப அட்டையில், விடுபட்டுள்ள குடும்ப உறுப்பினர்களின் ஆதார் அட்டையினை அந்தந்த நியாயவிலைக் கடையில் கொடுத்து ஆதார் எண்ணினை இணைத்துக்கொள்ள தற்போது வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் இந்த கடைசி வாய்ப்பினை நழுவ விடாமல், விடுபட்ட குடும்ப உறுப்பினர்களின் ஆதார் எண்ணினை நியாயவிலைக் கடையில் உள்ள இயந்திரத்தில் உடனடியாக பதிவு செய்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

---

ந.க.ஜே1/8278/2016

மாவட்ட வழங்கல் அலுவலகம்,
வேலூர்.
நாள்:21/03/2017

ஒம்/-சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

//உத்திரவு படி//

21/3/17

மாவட்ட வழங்கல் அலுவலரின்,
நேர்முக உதவியாளர்,
வேலூர் மாவட்டம்.

21.3.2017